**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.
2026ம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 2/2024</u>

<u>CNR NO. TNTU09-000130-2024</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம், குற்ற எண். 144/2018 |
| 2. | எதிரிகள் | எ1. விஷ்ணு த/பெ. வெங்கடேசன்<br>எ2. வீனஸ் த/பெ.வெங்கடேசன் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii). |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 09.05.2018 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 10.05.2018 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | A1-A2-10.05.2018-17.05.2018 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 11.08.2018 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 18.06.2024 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.10.07.2026 குவிமுச.பிரிவு 320(2)-ன் கீழ் 1161/2026. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 – அ.சா.3-10.07.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)-ன் கீழ் வினவிய நாள் | 16.07.2026 |

| | | |
|---|---|---|
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 21.07.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம்,

எதிரிகள் : 1. விஷ்ணு த/பெ. வெங்கடேசன்
2. வீனஸ் த/பெ.வெங்கடேசன்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii).

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | விஷ்ணு | வெங்கடேசன் | இந்து | கூலி | நேதாஜி நகர், வாணியம்பாடி | 29 |
| 2 | வீனஸ் | வெங்கடேசன் | இந்து | கூலி | நேதாஜி நகர், வாணியம்பாடி | 27 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 09.05.18 | 10.05.18 | A1–A2– 10.05.2018 | A1–A2– 17.05.2018 | 18.06.24 | 16.07.26 | 21.07.26 | – |

இவ்வழக்கானது 06.01.2024 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 16.07.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராஜி, மற்றும் திரு.T.விக்னேஷ் அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## <u>தீர்ப்புரை</u>

### <u>1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>

இவ்வழக்கில் வாணியம்பாடி நகர காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட நேதாஜி நகர் மதினா காம்பளக்ஸ் என்ற இடத்தில் கடந்த 2018ம் வருடம் மே மாதம் 9ம் தேதி வழக்கின் வாதியான நரேஷ்குமார் என்பவரை எதிரி 1 விஷ்ணு மற்றும் எதிரி 2 வீனஸ் என்பவர்கள் வாதியின் தம்பியான சுரேஷ் என்பவரை பார்த்து எதிரி 1 எங்கடா உன் அண்ணன் தேவிடியா பையா கண்டாற ஓழி மகனே என்று அசிங்கமாக திட்டியதாகவும், வாதி நரேஷ்குமார் என்பவரை எதிரி 1 இரும்பு ராடால் தலையின் மீது அடித்தும் அதே இரும்பு ராடை வாங்கி எதிரி 2 வாதியின் முதுகு மீது அடித்தும் மற்றும் வாதியின் தம்பியான சுரேஷ் என்பவரை எதிரி 1 இரும்பு ராடால் தலையின் மீது அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், வாதி மற்றும் வாதியின் தம்பி இருவரையும் பார்த்து எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்பு ராடை காட்டி இனிமேல் எங்கள் பேச்சுக்கு வந்தால் உங்களை இதாலே கொலை செய்துவிடுவோம் என மிரட்டியுள்ளார். எனவே, எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான திரு.பிரகாசம், உதவி ஆய்வாளர் பணிமாறுதலில் சென்று விட்டதால் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் திரு. தம்பிதுரை அவர்கள் ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இதற்கு எதிரிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவிக்கப்பட்டது. **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1** ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5 (i) அ.சா.1 நரேஷ்குமார் இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சி ஆவார். அ.சா.1 நரேஷ்குமார் சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் திருவிழாவில், இருட்டில் நான் கீழே விழுந்து தலையில் அடிப்பட்டதால்

சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் திரு.பிரகாசம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1 நரேஷ்குமாரை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார்.

5 (ii) திரு.பிரகாசம், உதவி ஆய்வாளர் அவர்கள் புகார் வாக்குமூலம் பெற்று அதற்கேற்ப நிலைய குற்ற எண் 144/2018 இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, 09.05.2018 சம்பவயிடம் சென்று, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முருகன், பிச்சாண்டி ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii) பின்பு, 09.05.2018 மணிக்கு சாட்சிகள் முருகன், பிச்சாண்டி முன்னிலையில் சம்பவயிடத்தில் கைப்பற்றிய சா.பொ.1 2 அடி நீளமுள்ள இரும்பு ராடு ஒன்று, அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி அ.சா.ஆ.8 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின்பு, சாட்சிகள் அ.சா.1 நரேஷ்குமார், அ.சா.2 சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகளை 10.05.2018ம் நேதாஜி நகர் SBI ATM அருகே அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரிய வந்ததால் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய்

என கூறினார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

7. இவ்வழக்கில் கடந்த 2018ம் வருடம் மே மாதம் 9ம் தேதி வழக்கின் வாதியான நரேஷ்குமார் என்பவரை எதிரி 1 விஷ்ணு மற்றும் எதிரி 2 வீனஸ் என்பவர்கள் வாதியின் தம்பியான சுரேஷ் என்பவரை பார்த்து எதிரி 1 எங்கடா உன் அண்ணன் தேவிடியா பையா கண்டாற ஓழி மகனே என்று அசிங்கமாக திட்டியும், வாதி நரேஷ்குமார் என்பவரை எதிரி 1 இரும்பு ராடால் தலையின் மீது அடித்தும் அதே இரும்பு ராடை வாங்கி எதிரி 2 வாதியின் முதுகு மீது அடித்தும் மற்றும் வாதியின் தம்பியான சுரேஷ் என்பவரை எதிரி 1 இரும்பு ராடால் தலையின் மீது அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், வாதி மற்றும் வாதியின் தம்பி இருவரையும் பார்த்து எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்பு ராடை காட்டி இனிமேல் எங்கள் பேச்சுக்கு வந்தால் உங்களை இதாலே கொலை செய்துவிடுவோம் என மிரட்டியுள்ளதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான நரேஷ்குமார் அரசு தரப்பில் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 நரேஷ்குமார் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் திருவிழா நடந்தது. அப்போது இருட்டில் நான் கீழே விழுந்துவிட்டேன். அதனால் எனக்கு தலையில் அடிப்பட்டு விட்டது. அதில் ஏற்பட்ட காயத்திற்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதை போலிசார் ஒரு வெள்ளை தாளில் வாங்கிக்கொண்டார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.போலிசார்

என்னை விசாரிக்கவில்லை " என அரசு தரப்பில் வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

9. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சுரேஷ் அவரது நீதிமன்ற விசாரணையின்போது , "சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு திருவிழா நடந்தது. அப்போது அங்கு கூட்டத்தில் சண்டை நடந்தது. யாருக்கு என்று தெரியாது. எனக்கு தலையில் அடிப்பட்டது. இருட்டில் என்ன நடந்தது என்று தெரியாது.தலையில் காயம் ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலிசார் ஒரு வெள்ளை தாளில் வாங்கிக்கொண்டார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை " என அரசு தரப்பில் வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

10. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 3, 4, 5, 6 விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். ஆகையால், அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தம்பிதுரை, உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் உதவி ஆய்வாளர் திரு.பிரகாசம், வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அ.சா.1 நரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலத்தைப் பெற்று, பின்னர், திரு.பிரகாசம், உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலத்தினைப் பெற்று அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னர், அவரே வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை

கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 காயச்சான்றிதழ்களைப் பெற்று புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியான திரு.பிரகாசம், உதவி ஆய்வாளர் நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவர்களது கடமையை சட்டப்படியாக செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

12. அ.சா.1 நரேஷ்குமார் புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையின்போதும், எதிரிகள் வாதியின் தம்பியான சுரேஷ் என்பவரை பார்த்து தேவிடியா பையா கண்டாற ஓழி மகனே என்று அசிங்கமாக திட்டியும், இரும்பு ராடால் தலையின் மீது அடித்தும் முதுகு மீது அடித்தும், இரும்பு ராடால் தலையின் மீது அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், வாதி மற்றும் வாதியின் தம்பி இருவரையும் பார்த்து எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்பு ராடை காட்டி இனிமேல் எங்கள் பேச்சுக்கு வந்தால் உங்களை இதாலே கொலை செய்துவிடுவோம் என மிரட்டியதாகக் கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக **சுமார் எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் திருவிழா நடந்தது. அப்போது இருட்டில் நான் கீழே விழுந்துவிட்டேன். அதனால் எனக்கு தலையில் அடிப்பட்டு விட்டது என்றும், போலிசார் ஒரு வெள்ளை தாளில் வாங்கிக்கொண்டார்கள் என்றும், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை** அரசு தரப்பில் வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றார்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிரிகளும், அ.சா.1ம் சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 10.07.2026ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 1161/2026ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

13. இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான அ.சா.1 நரேஷ்குமார் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து மட்டும் ஒப்புக்கொண்டு போலிசார் ஒரு வெள்ளை தாளில் கையொப்பத்தை வாங்கிக்கொண்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கின் மூல ஆதாரமான அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலமே சந்தேகத்திற்கு உள்ளாவதாலும், காயமுற்ற சாட்சியான அ.சா.1 நரேஷ்குமார் இருட்டில் கீழே விழுந்துவிட்டதால் மருத்துவமனை சென்றதாக சாட்சியம் அளித்துள்ளதாலும், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சுரேஷ் இருட்டில் என்ன நடந்தது என்று தெரியாது என்றும், விவரங்கள் எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள் குற்றம் புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

14. <u>**முடிவாக,**</u> எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழ் குற்றச்சாட்டுகளை பொறுத்து எதிரிகள் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

15. இவ்வழக்கில் சி.பி.226/2018ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான சா.பொ.1 2 அடி நீளமுள்ள இரும்பு ராடு ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிபடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 21 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| வ. எண் | அரசு தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு. நரேஷ்குமார் | புகார்சாட்சி |
| 2. | அ.சா.2 | திரு.சுரேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு. தம்பிதுரை, உதவி ஆய்வாளர் | ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்தவர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| வ. எண் | ஆவணத்தின் எண் | ஆவணங்களின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 10.05.2018ஆம் தேதியிட்ட புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம். | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 10.07.2026 ஆம் தேதியிட்ட சமாதான மனு. | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | 10.05.2018 ஆம் தேதியிட்ட புகார் வாக்குமூலம். | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.4 | 10.05.2018 ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. | அ.சா.3 |
| 5. | அ.சா.ஆ.5 | 10.05.2018 ஆம் தேதியிட்ட பார்வை மகசர். | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| 6. | அ.சா.ஆ.6 | 10.05.2018 ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம். | அ.சா.3 |
| 7. | அ.சா.ஆ.7 | 10.05.2018ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர் | அ.சா.3 |
| 8. | அ.சா.ஆ.8 | 07.08.2018ஆம் தேதியிட்ட படிவம் 91. | அ.சா.3 |
| 9. | அ.சா.ஆ.9 | 09.08.2018ஆம் தேதியிட்ட நரேஷ்குமார் என்பவரின் காயச்சான்று. | அ.சா.3 |
| 10. | அ.சா.ஆ.10 | 09.08.2018ஆம் தேதியிட்ட சுரேஷ் என்பவரின் காயச்சான்று. | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்று பொருள்**

| வ. எண் | சான்று பொருள் வரிசை எண் | சான்று பொருள் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1 | சா.பொ.1 | 2 அடி நீளமுள்ள இரும்பு ராடு–1 | அ.சா.3 |

**எதிரி தரப்பு சாட்சிகள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றுப் பொருட்கள் மற்றும் சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.